28th September 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மைக் உபயோகிப்பதில், யார் அங்கே கேட்பதற்காக வீற்றிருக்கிறார்களோ அவர்கள் காதில் மட்டும் சத்தம் போவதானால் பரவாயில்லை. தெருவிலுள்ள எல்லோருக்கும் கேட்கிறது, எல்லோருக்கும் பெரும் தொல்லையாக இருக்கிறது. ஆகவேதான் சில நிபந்தனைகள் போட வேண்டியிருக்கிறது. அது எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். 10 மணி வரைக்கும் என்றால், மற்றவர்கள் அதற்குப் பிறகாவது தூங்கவேண்டும் என்பதற்காகத்தான் சில சமயங்களில் இது தளர்த்தவும் படுகிறது.

SRI N. K. PALANISAMI : இப்பொழுது பர்மிஷன் வாங்க ஐந்து நாட்களுக்கு முன் அப்ளை செய்ய வேண்டும் என்று இருக்கிறது. பொதுத்தேர்தலை முன்னிட்டு, உடனுக்குடன் கொடுக்கும் அளவுக்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பொதுத் தேர்தல் பற்றி, தளர்த்துவதுபற்றி யோசனைகள் கூறும் வகையில், தனிக் கேள்வி போட்டால் அடுத்த கூட்டத்தில் பதில் சொல்லலாம்.

Industrial estate for Udayarpalayam

* 1890 Q.—SRI S. RAMALINGA PADAYACHI : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உடையார்பாளையம் தாலுகாவில் தொழிற்பேட்டைகள் எவையேனும் எங்கேயாவது ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI S. RAMALINGA PADAYACHI : கனம் அமைச்சர் அவர்கள் உடையார்பாளையத்தில் தொழில் பேட்டை ஒன்றை அமைக்க முடியாது என்று பதில் சொன்னார். அது ரொம்பவும் பிற்பட்ட பகுதி. எந்த விதத்திலும் வளர்ச்சி அடையாத பகுதி அது. அங்கு தொழில் பேட்டை அமைக்க வேண்டியது ரொம்பவும் அவசியம். ஆதலால் அங்கு தனியார் துறையிலாவது அல்லது சர்க்கார் துறையிலாவது ஒரு தொழிற் பேட்டையை அமைக்க இந்த அரசாங்கம் ஏதாவது வழி வகை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தொழில் பேட்டை வைப்பது என்பது கடையில் வாங்கிச் சாப்பிடுவதுபோல் அன்று. தொழில் பேட்டை வைப்பதாக இருந்தால் அதை வைப்பதற்குவேண்டிய இடம், மற்றும் வசதிகள் எல்லாம் இருக்கவேண்டும். இப்பொழுது திருச்சியில் வைக்கப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களிலும் வைக்கப்பட்டிருக்கிறது. பிற்போக்கான இடமாக இருந்தால் மட்டும் போதாது. அதை வைப்பதற்கு வேண்டிய மற்ற எல்லா வசதிகளும் இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதில் சர்க்கார் இப்பொழுது கவனம் செலுத்திக் கொண்டு தான் வருகிறது.

Sugarcane (price)

* 1890-A Q.—SRI S. M. ANNAMALAI: கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கரும்பின் விலையைக் குறைக்கவேண்டுமென்று மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் கேட்டுள்ளார்களா ?

(இ) சர்க்கார் நிர்ணயித்திருக்கும் விலையைவிட குறைந்த விலையில் விவசாயிகள் கரும்பு தருவதற்கு முன்வருகிறார்கள் என்பது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) No, Sir.

(இ) No, Sir.

[28th September 1961

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், வெளி நாட்டிற்கு சர்க்கரை ஏற்றுமதி செய்வதில் ஏற்படக்கூடிய நஷ்டத்தை சரிக்கட்டுவதற்கு வேண்டிய கரும்பு இத்தனை விலைக்குத்தான் விற்கப்பட வேண்டும் என்றும் இத்தனை சத விகிதம் குறைத்து விற்க வேண்டும் என்றும், அந்த முறையில் கரும்பு விலையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் மத்திய சர்க்கார் வெளியிட்ட ஒரு அறிக்கையில் வந்திருக்கிறது. அதனுடைய நோக்கம் என்ன ? அந்த அடிப்படையில் சர்க்கரையை குறைந்த விலைக்கு வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த முறையில் என்னுடைய அபிப்பிராயத்தை நான் முன்னமேயே தெரிவித்திருக்கிறேன். சர்க்கரையை குறைந்த விலைக்கு விற்க வேண்டுமானால் அது விவசாயிகளுக்கு கட்டுப்படியாகும்படியாக இருக்கவேண்டும். ஆலைகளுக்கும் லாபம் ஏற்படும் வகையில் விலையை நிர்ணயிக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த முறையில் ஏற்றுமதி செய்வதை விரிவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதற்கு வேண்டிய பரிசீலனையும் செய்யப்பட்டிருக்கிறது. இதைப்பற்றியேதான் நான் முன்பே கூறியிருக்கிறேன். அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

Industries in North Arcot district

* **1890–B Q.**—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வடாற்காடு ஜில்லாவில் என்னென்ன சிறிய பெரிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படுமென்று திட்டமிடப்பட்டது ?

(இ) எதெது, எங்கெங்கே ஆரம்பிக்கப்பட்டது ?

(உ) எதெது ஆரம்பிக்கப்படவில்லை ? இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள் ஆரம்பிக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ), (இ) & (உ) Under the Second Five-Year Plan, the following industrial undertakings were proposed to be set up in the North Arcot district—

(1) A co-operative sugar mill.

(2) Service Centre for tanning and finishing of leather at Vinnamangalam.

(3) General Purpose Engineering Workshop, Vellore, and Government Cycle Assembly Unit, Vellore.

(4) An industrial colony at Katpadi.

The first three undertakings have gone into production. The industrial colony is expected to start functioning shortly.

SRI A. A. RASHEED : In view of the backwardness of the North Arcot district in industrialisation, will the Government consider the starting of more industries in the North Arcot district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If entrepreneurs come forward, their applications will be considered with all sympathy and appreciation.